# ஐந்தாண்டுத் திட்டப் பாடல்கள்

மதுரை காமராசர் பல்கலைக்கழக
அவ்வை
தி. சு. சண்முகம் நூலகம்
தமிழியல் துறை

சென்னை அரசாங்க செய்தித் துறை
வெளியீடு

முதற் பதிப்பு: ஆகஸ்டு 1957.

அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல வரிசை எண்: 1631
நன்கொடை எண்: 1631

விலை 15 காசுகள்.

மதுரை காமராசர் பல்கலைக்கழகம்
அவ்வை
தி. க. சண்முகம் நூலகம்.
திருச்சிராப்பள்ளி

# முன்னுரை


நாட்டின் நலிவைப் போக்கி மக்கள் வளமான வாழ்க்கை வாழ்ந்திட நல்லறி வாளர்களால் ஐந்தாண்டுத் திட்டங்கள் தீட்டப்பெற்றன. கடமையிலே கருத்தும், வினையாற்றும் வகையிலே ஊக்கமும் கொண்ட அரசாங்க ஊழியர்களாலும், தங்களின் ஆதரவையும் ஒத்துழைப்பையும் பெரும் அளவில் நல்கும் பொதுமக்களாலும், திட்டங்கள் வெற்றிகரமாக நிறைவேறி வருகின்றன.

இத்திட்டங்களின் சாதனைகளைக் குறித்து பாலபாரதி திரு. ச. து. சு. யோகி, திரு. எஸ். டி. சுந்தரம், திரு. என். எஸ். சிதம்பரம் ஆகிய கவிஞர்கள் பாடியுள்ள பாடல்களின் தொகுப்பே இச் சிறு நூல்.

இந்நூலின்கண் கிராம மக்களின் உள்ளமும் செவியும் விரும்பும் வண்ணம் சுவையான இன்தமிழ்ப் பாடல்கள் தொகுக்கப் பட்டுள்ளன. எல்லோரும் வாங்கிப் படித்து இன்புறுவார்கள் என்ற எண்ணத்துடன் இதனை வெளியிடுகிறோம்.

நெறியாளர்,
செய்தித் துறை.

# பாலபாரதி திரு. ச. து. சு. யோகி
# பாடல்கள்



## ஆடு பாம்பே !

### பொது


ஆடு நாகமே—கொண்—டாடு நாகமே—சிவ
நாதனுர்முடி—தனில்—மேவு நாகமே—சிவ
காமித் தேவிகை—வளை—யான நாகமே-பசும்
மாயனுர்துயி—லணை—யாகும் நாகமே—குக
ஞேடுலாசமாய்—விளை—யாடு நாகமே—கனிந்
தாடு நாகமே—தெளிந்—தாடு நாகமே—பதம்
பாடு நாகமே—இதம்—நாடு நாகமே—இசை
யோடு நாகமே—பட மாடு நாகமே— (1)

பாமுறும்—தீமைகள்—யாவையும்—தீரவே
வாழிநம்—நாடென—வேயர—சாங்கமும்
போடுது—திட்டங்களே—அவைகளினுல்
போகுது—கஷ்டங்களே—என்பதைச்சொல்லி
(2)

நாட்டினிலே—வறுமைக்—கோட்டினிலே—
பஞ்சப்
பாட்டினிலே—வஞ்சப் பூட்டினிலே—நஞ்சு
வீட்டினிலே—நோயின் கேட்டினிலே—கஞ்சி
ஓட்டினிலே—என்னும்—ரேட்டினிலே—மக்கள்
வாட்டங் களழிந்திடுமே—அஞ்சாண்டு
திட்டம்
வளமைகள் பொழிந்திடுமே—என்பதைச்
சொல்லி. (3)

நீர் வளமும்—தான்யச் சீர்வளமும்—வைக்கல்
போர் வளமும்—கல்வி யோர் வளமும்—
செல்வம்
சேர் வளமும்—இன்பம்—ஆர் வளமும்—என
எங்கெங்கும்—மங்கலமே—அஞ்சாண்டுத்
திட்டம்
பொங்கும் வளம் தருமே—என்பதைச்
சொல்லி. (4)

வீரத்திலே—தொழிற்—தீரத்திலே—நெஞ்சில்
ஈரத்திலே—அன்பு—வாரத்திலே—உப
காரத்திலே—ஞான சாரத்திலே—அலங்
காரத்திலே—கலைத்—தீரத்திலே—மக்கள்
நாகரீகம் பொங்கிச் செழிக்கும்—
அஞ்சாண்டுத் திட்டம்
நாட்டிலெங்குமின்பம் கொழிக்கும்—
என்பதைச் சொல்லி. (5)



## பாசனத் தெம்மாங்கு

கங்கம்மா.—வருசங்கள் பூராச் சோடே—
வாக்கரிசிக்கும் வகையில்லே
புருசனுக்கும் வேலையில்லே
கண்ணே மங்கம்மா—ஒரு
போக்கிட முங்காணவில்லே
பெண்ணே மங்கம்மா

மங்கம்மா.—அஞ்சாண்டுத் திட்டமடி—
அரசாங்கத் திட்டமடி
அஞ்சேலென்றுதரிக்கும்
கண்ணே கங்கம்மா—நம்ம
பஞ்சமெல்லாம் தீர்ந்ததடி
பெண்ணே கங்கம்மா

கங்கம்மா.—திட்டமதோ விட்டமதோ—
சட்டமதோ கொட்டமதோ
பட்டினியாம் பாழ் வயிறு
கண்ணே மங்கம்மா—
முதுகெ பெண்ணே
ஒட்டி உறவாடுதடி
மங்கம்மா



மங்கம்மா.—பட்டினிக்கே பட்டினியாம்—
பண்ணெயெல்லாம் கதிர்
வெளச்சிக்
கொட்டிக் குவிச்சிருக்குக்
கண்ணே கங்கம்மா—சர்க்கார்
திட்டம் செளிச்சிருக்குப்
பெண்ணே கங்கம்மா

கங்கம்மா.—திட்டமிட்டா மழை வருமா—
பொட்டல் விளஞ்சிடுமா
வெட்டிப் பேச்சுப் பேச
வேண்டாம் கண்ணே மங்
கம்மா—சர்க்கார்
வெத்து வேட்டுப் போடுதடீ
பெண்ணே மங்கம்மா

மங்கம்மா.—வெட்டிப் பேச்சு பேசவில்லே—
வெத்து வேட்டுப் போடவில்லே
எட்டிவான மேகத்தெக் கண்ணே
கங்கம்மா—சர்க்கார்
கட்டிப்பிடிக்கவில்லே கண்ணே
கங்கம்மா

2A.



**கங்கம்மா.**—பின்னே என்ன ?

**மங்கம்மா.**—சொல்றேன் கேளு

ஆத்துத் தண்ணிக் கணையப்
போட்டு—அதெத்தேக்கி
வாய்க்காவெட்டி

பாத்தியெல்லாம் பாச்சுகிருர்
கண்ணே கங்கம்மா—
பண்ணெச் சேத்திலெங்குஞ்

செங்நெல்லடி பெண்ணே
கங்கம்மா

கீளெப் பவானித்திட்டம்—
மேலே மேட்டூருத் திட்டம்

மணியாத்துத் திட்டம் பாரு—
மலம்புழா அணையெப்பாரு

ஆரணியாத்துத் திட்டம்—
ஆறுகுளமேரித் திட்டம்

கோடானுக் கோடி ரூபாய்
கொள்முதலாக் கொட்டிவச்சி

நாடு முழுதுஞ் செளிக்கக்
கண்ணே கங்கம்மா—
அஞ்சாண்டு நல்ல திட்டம்
நடக்குதடீ பெண்ணே கங்கம்மா

**கங்கம்மா.**—ஓஹோ ஹோ !

**மங்கம்மா.**—அஹ ஹா ஹா

கங்கம்மா.—ஆச்சரியம் ஆச்சரியம்—
அம்மாடிமோ நம்ம·கஷ்டம்

மங்கம்மா.—போச்சுதென்று பண்பாடுவோம்
கண்ணே கங்கம்மா—இன்பம்


கங்கம்மா.—வாச்சுதென்று கொண்டாடு
வோம் கண்ணே மங்கம்மா!

மங்கம்மா.—புஞ்சையெல்லாம் நஞ்சை
யாச்சு—

கங்கம்மா.—...........புல்லெல்லாம்
நெல்லாப் போச்சு

இருவரும்—அஞ்சாண்டுத் திட்டத்தினுல்
பஞ்சமும் நோயும்—
இப்போ பஞ்சு பஞ்சாப்
பறக்குதென்றே கொண்டா
னடிப்போம்.





## புது வாழ்வு

**பல்லவி**


இந்த நன்மையெல்லாம் எதனுல் ?—நமக்கு
[நாம்
இனிதாய் வகுத்துக்கொண்ட ஐந்தாண்டுத்
[திட்டத்தால் (இ)

**அநுபல்லவி**

சிந்தை மகிழும்படி சிறந்தபயன் கண்டோம்
சீருடன் முன்னேற்றம் சேர்ந்திடவே
[கண்டோம் (இ)

**சரணங்கள்**

விவசாயத் துறையில் வெகுநலன்கள்
[அடைந்தோம்
விரும்பும் பருத்திமுதல் கரும்பும்மிக
[விளைத்தோம்
பவானி நீர்ப்பாசனம் பலன்தரவே
[கண்டோம்
பைந்தமிழ் நாட்டினிலே பயிர்வளங்கள்
[கண்டோம் (இ)



இருளே சூழாமல் இரவினில் கிராமங்களில்
இன்னொளி வீசுகின்ற மின்விளக்குகள்
[கண்டோம்

அருளான கல்வியை அளிக்கின்ற பள்ளிகள்
அநேகம் கிராமங்களில் அமைந்திடவே
[கண்டோம் (இ)

ஆதி திராவிடராம் அரிசன மக்களெல்லாம்
அருங்கல்வி பயின்று பெருமைபெறக்
[கண்டோம்

தீதுறும் தீண்டாமை தீய்ந்திடவே
[கண்டோம்

தேசத்தில் யாவரும் நேசமுறக் கண்டோம்
(இ)

கல்வியில்லா முதியோர் கல்விகற்கக்
[கண்டோம்

கருத்துணரும் மாதரின் கழகம்பல
[கண்டோம்

செல்வமுடன் நாடு செழிப்பெய்தக்
[கண்டோம்

சேரும் தொழிலனைத்தும் சிறப்புறவே
[கண்டோம் (இ)




# நமதருமைத் திட்டம்

ராகம் : செஞ்சுருட்டி] [தாளம் : ஆதி.

பல்லவி


யாருக்குமே அருமை—அஞ்சாண்டுத் திட்டம்
பாருக்கெல்லாம் பெருமை

அநுபல்லவி


ஊருக்குள்ளே கிணற்றின் ஓரத்திலே
பெண்கள்
ஊர் வம்பு தும்புகள் பேசுவார்—ஆண்கள்
ஊரிலிரண்டு கட்சி உனக்காச் செனக்காச்
சென்று
உக்கிரமாகக் கையை வீசுவார்—இன்றோ
ஊரவரொன்று கூடிச் சீர்பெறும் வகைநாடி
ஓடிவுழைத்து நலம்—தேடிக் களித்திடுவார்.

சரணம்

குப்பைமே டுயர்ந்துமே கோபுர மாச்சே
குள்ளநரித் தனங்கள் போச்சே
குச்சுக் குடிசைகள் மன்மச்சு மனைக ளாச்சே
குத்திரம் கோணும் வீணாச்சே
கப்பிக் கல்லும் புழுதிக் கல்லும் படிந்த ரஸ்தா




கண்ணாடி போலச் சுத்த மாச்சே
காட்டாந்தரையும் பொட்டல் மேட்டாங்
காடுகளும்
கதிர் விளைக்கும் கழனியாச்சே
பாமர மக்க ளெல்லாம் படித்திட லாச்சே
பஞ்சமும் நோய்களும் வஞ்சமும் போச்சே
நாமிந்த நாட்டு மன்ன ரென்றிடும் பேச்சே
நட்பிடமே நமக்கு நம்பிக்கை யாச்சே
தீமைகள் போயாச்சே—நன்மைகளெல்லாம்
தேடியடையலாச்சே—சர்க்கார் தயவால்



## கிளிக்கண்ணி

1 எட்டாத கொம்பினிலே
கிட்டாப் பழத்தை எண்ணிக்
கொட்டாவி விட்டோ மென்றே—கிளியே
குற்றங் குறை சொன்னாரடீ

2 எட்டி எட்டிப் பார்த்தாலும்
எட்டாது வானம்போலே
எட்ட எட்டப் போகுமென்றே—கிளியே
ஏசினாங்க பேசினாங்க

3 ஏறாத மலைமேலே
இறக்காத தேனை எண்ணி
கூறுகெட்டுப் போனோமென்றே—கிளியே
தாறு மாறாக் கூறினாங்க

4 கும்பிக்கு கூழில்லே
கொண்டைக்கு பூவைத் தேடித்
தெம்பு கெட்டுப் போனோ மின்னு—
கிளியே
வம்பும் தும்புஞ் சொன்னாரடீ

5 கட்டக் கந்தையுமில்லே
கஞ்சிக்கு வழி இல்லெ
திட்டமாம் திட்டமென்றே—கிளியே
திட்டமின்றித் திட்டினுங்க—அன்று
திட்டமின்றித் திட்டினுங்க—இன்றோ

6 திட்டினவர் திட்டி நிற்கத்
திட்டத் தைத்திட்டப்படி
எட்டுத் திக்கிலும் வெதச்சோம்—கிளியே
இன்பம் வெளையுதடீ

7 கும்பிக்குச் சோறளித்தோம்
கொண்டைக்கும் பூவளித்தோம்
நம்பிக்கையூட்டிவிட்டோம்—கிளியே
நாடு செழிக்குதடீ

8 ஏருத மலைமேலே
இறக்காத கொம்புத்தேனை
ஏறி இறக்கி விட்டோம்—கிளியே
எங்கும் வளம் பொங்குதடீ

9 எட்டி எட்டிப் பார்த்தாலும்
எட்டாத வான் வாழ்வை
கட்டிப் பிடித்துலகில்—கிளியே
காட்ட வழி தேடுகின்றோம்

10 எட்டாத கொம்பினையே
எட்டிப்பிடித்து விட்டோம்
கிட்டாப் பழத்தை உண்டோம்—கிளியே
கீழ்மையெல்லாம் போகுதடீ

11 வெள்ளைக்காரன் செய்யாத
வித்தைகளெல்லாம் இப்போ
கொள்ளை கொழிக்குதடீ—கிளியே
குடியாட்சிச் செல்வமடீ

12 ஆத்தி லணை போட்டாச்சு
அணையில் வெள்ளப் பூட்டாச்சு
சேத்திலெல்லாம் நெல்லாகுதே—கிளியே
செனங்க துன்பம் தீருதடி

13 எண்ணெயில்லே கிண்ணியில்லே
எரியுந் திரியுமில்லே
திண்ணமுறு மின்சாரந்தான்—கிளியே
தீபங்கள் ஏற்றுதடீ

14 கட்டெ வண்டியைக் கவுக்கும்
இட்டேறித் தடங்கூடக்
கட்டு மணிக் காங்க்ரீட்டிலே—கிளியே
காரோடும் ரோட்டாச்சடீ

15 ஓலைக் குடிசை யெல்லாம்
ஓட்டு மனையாயிடிச்சு
வேலெ நெறைஞ்சிருக்கு—கிளியே
வீரம் நெறெஞ்சிருக்கு

16 கல்வி பெருகுதடி
கலைகள் வளருதடி
செல்வம் கொழிக்குதடி—கிளியே
தேசஞ் செழிக்குதடி

17 வீட்டுக்கு வீடு சண்டை
வீதி முச்சூடும் சண்டை
கூட்டுறவாப் போச்சுதடி—கிளியே
குணங்கள் பெருகுதடி

18 நாட்டுப் புறத்திலெல்லாம்
நாகரீகம் பொங்குதடி
ஆட்டமுடன் பாட்டுக்களும்—கிளியே
ஆனந்தம் பொங்குதடி

19 சோளப் பொம்மெ போலவேதான்
சோர்ந்தெலும்பும் தோலுமான
காளெ யெல்லாங் கொழு கொழுன்னு—கிளியே
கண்ணெக் கவருதடி

20 அஞ்சு வயதுக்குள்ளே
அறியாப் பருவத்திலே
பிஞ்சிலே செஞ்ச நம்மை—கிளியே
பேசற் கருமையடா

21 இன்னுமஞ் சாண்டுக்குள்ளே
இந் நாட்டைப் பொன்னாடாய்
மன்னும்படி செய்வேனென்றே—கிளியே
வல்லபங்கள் பேசுகிறாள்
ஏறாமலெ—மேலேறியே
எல்லாம் அறியும் குரச் செல்லாயி நான்
நான் பொறந்த ஊருதான்
நல்லூ ரென்னு பேருதான்.



## இணையில்லா வாழ்வு

ராகம்—தோடி, தாளம்—ஆதி

**பல்லவி**

திட்டமிட்டு வேலை செய்யுங்கள்—
அஞ்சாண்டுத்
திட்டமிட்டு வேலை செய்யுங்கள்

**அநுபல்லவி**

துஷ்டப் பேச்சுப் பேசி இஷ்டப்படி யெல்
லாம் சென்றே
நஷ்டமுடனே யுழன்றே கஷ்டப்படாம
லின்றே

**சரணம்**

சின்னச் சின்னச் சிற்றெறும்பு கூடும்—கூடிப்
பின்னர் வரும் பஞ்சகாலம் தன்னை யெண்ணி
யிப்பொழுதே
சேர்ந்து பல பண்டங்களைத் தேடும்—தேடிச்
சேமிப்பாய்ப் புத்திற் கொண்டு போடும்—
வண்ணம்
ஊரிலெல்லாரு மொன்ருய்க் கூடி—தெய்வத்
துதவி சர்க்காருதவி நாடி—இந்தப்
பாரில் நமக்கிணையாக யாருமில்லை யென்றபடி
செருக்குடன் வாழ்க்கை நலம் மோங்க—இன்ப
பெருக்கெடுத்தோடத் துன்ப மேங்க—நீங்கள்

# இன்பம் எங்கே ?

ராகம்—மணிரங்கு. தாளம்—ஆதி.

பல்லவி

உன்னையே நீ நட்பு—
உனக்குதவி செய்ய முன்வரும் சர்க்கார்
தன்னையும் நீ நம்பு. (1)

அநுபல்லவி

முன்னை விதி வரட்டும்—மூளும் துயர்
[தரட்டும்
தன்னை நம்பின பேர்க்குத்—தரணியிற்
[பயமில்லை. (2)


சரணம்

தன்கையே தனக்குதவி யாகுமெனச்
சாற்று மொழியை எண்ணிப் பாரு—தனக்குத்
தானே யுதவிசெய் வார் தமக்கே தெய்வ
[முதவும்
சர்க்காருமே யுதவும் தேரு—சர்க்கார்
அஞ்சாண்டுத் திட்டப்படி யானந்தக்
[கோட்டை கட்டி
அஞ்சாமலே தினமும் நெஞ்சாரவே
[யுழைப்பாய்—(உ). (3)

வம்புமகா சபை கூடும் மாதர்களும் வீணுக
வழக்காடும் மாந்தர்களும் ஒன்ருக—வெறும்
கும்புகூடிக் கூச்சலிட்டுக் குதியாட்டம்
[போடாமல்
கூட்டுறவுப் பாதையிலே நன்ருக—சொந்த
உடன் பிறந்தார்களைப் போலுடன்பட்
[டைந்தாண்டுத் திட்டத்
திடல் கொண்டு வேலை செய்தாற் திருவுஞ்
[செல்வமும் சேரும்—(உ). (4)

ஊரிலெல்லாருங் கூடி யுறுதியாக யின்பம்
[நாடி
ஊரை உயர்த்தும் வகை தாமே—இந்தப்
பாரில் நம்நாடே முதற்—சீருடைய தாமென்
னும்
பேரைப் படைத்திடலாமே—என்னும்
அரசாங்கத்திற்கு ஜே ஜே—ஆக்கத்
[திட்டத்துக்கு ஜே ஜே
முரசை யறைந்து நாமே—முன்னேறுவோமே
[ஜே ஜே ஜே—(உ). (5)





# முதியோர் கல்வி

கிழவன்.—அ ஆ னா எழுதச் சொன்னா ஆனெ
எழுதுவேன் (நானே)

கிழவி.—ப்பானா எளுதச் சொன்ணாப் பானெ
எழுதுவேன் (இப்போ)

கி-ன்.—அ ஆ இ ஈ உ ஊ எ ஏ ஐ ஒ ஓ ஔ
அக்கு (மேலே)

கி-வி.—க ங ச ஞ ட ண த ந ப ம ய ர ல வ ழ
ள ற ன—என்றே

கி-ன்.—அரிச்சுவடி எல்லாம் தெரியுது—
(பொஸ்தகங்க)

கி-வி.—அம்புட்டும் படிச்சா புரியுது—(அது
மட்டுமா)

கி-ன்.—ஒண்ணு ரெண்டு மூணு நாலு அஞ்சா
றேழெட்டொன்பது பத்து

கி-வி.—கூட்டல் கழித்தல் வகுத்தல் பெருக்கல்



கி-ன்.—காசெ எண்ணிப் பாக்கத் தெரியுது—
(கரக்கிட்டாக)

கி-வி.—கணக்கெழுதிப் பாத்தாப் புரியுது

கி-ன்.—ராமாயணம் மாபாரதம் பாகவதம்
பக்த வெசயம்

கி-வி.—அல்லி அரசாணிமாலே ஆர்யமாலெ
சூர்யமாலெ

கி-ன்.—தென்னலிராமன் கதெ தேசிங்கு
ராசன் கதெ

கி-வி.—முத்து வீராயிப் பாட்டு முக்கூடற்ப்
பள்ளுப் பாட்டு

கி-ன்.—பெரியெழுத்து விக்ரமார்க்கன் பேசும்
பன்னிரு பதுமைக் கதெ

கி-வி.—லாலிப் பாட்டு நலங்குப் பாட்டு
லாவணிப் பாட்டு—எல்லாம்

கி-ன்.—கூலியின்றிப் படிச்சுக்கிட்டோம்
கும்மாளம் போட்டு

பேரன்.—ஏ பீ சீ டீ இருவத்தாறும் எனக்குத்
தெரியுமே



அவ்வை தி.க. சண்முகம் நூலகம்,
நூல் வரிசை எண்: 1631
நன்கொடை எண்: 1631



பேத்தி.—ஏக் தோ தீன ஹிந்தியெல்லாம்
எனக்குப் புரியுமே

பேரன்.—தச்சு வேலை தெரியுமா?

பேத்தி.—தையவேலை தெரியுமா?

கின்.—சின்னஞ் சிறியோர் கல்வித் திட்டம்

கிவி.—பென்னம் பெரியோர் கல்வி திட்டம்

கின்.—அவரவருக்குத் தக்கபடி அறிவு
வளர்க்கும் அன்புத் திட்டம்

எல்லோரும்.—அஞ்சாண்டுக் கல்வித் திட்டம்
அரசாங்கம் போடும் திட்டம்

யாருக்குமே நல்ல திட்டம்
ஆச்சுதே—இந்த

ஊருக்கும் நாட்டுக்கு மேன்மை
யாச்சுதே.





## ஜய பேரிகை

ஜய ஜய பேரிகை கொட்டுவோம் வாரீர்—(நம்)
ஜன்ம பூமி வாழ்ந்திடவே
நயமிகுந்த ஐந்தாண்டுத் திட்டங்களின்
நன்மையாவும் சூழ்ந்திடவே—நம்
புன்மை யாவும் மாய்ந்திடவே—ஜயஹே!
ஜயஹே! ஜயஹே! ஜய ஜய ஜயஹே!
(ஜய)

பயன்மிகுந்த பல தொழில் புரிவோம்-எங்கள்
பசுந் தமிழ் நாட்டினுக் கெழில் தருவோம்
பய மொழிந்ததெனத் துயரழிந்த தெனப்
பஞ்சமும் நோய்களும் மடிந்த தெனவே

துயிலொழிந்த விழி துணிவு கொண்ட மனம்
தூய்மை கொண்ட செயலெழுந்த தெனவே
(ஜய)

உழவுக்கும் தொழிலுக்கும் சன்மானம்—
சர்க்கார்
உதவியினால் பெறுவோம் தன்மானம்
இழிவுக்கும் சோம்பலுக்கும் இலை மானம்—
நம்ம
இடையிலவை யிருந்தாலவமானம்
பொழில்கள் யாவும் மலர் கழனியாவும் கதிர்
புதுமையான சுகம் கொழித்த தெனவே
எழில் கொள் மாதர் விறலிணையும் மாந்தரென
இனிமை கொஞ்சத் திட்டம் செழித்த
தெனவே (ஜய)



## அன்றும் இன்றும்

அங்கெக்கும் இன்னைக்கும் ஒப்பிட்டுப் பாருங்க
சொப்பனமல்லங்க—நீங்க
அஞ்சாண்டுத் திட்டம் பயன்களைக் கண்டு
பின் அப்புறஞ் சொல்லுங்க (1)

குப்பையும் செத்தையும் குச்சுக் குடிசையும்
கோணலாம் வாழ்வப்போ
குப்பை யுயர்ந்துமே கோபுரமாகவே
கொஞ்சிடும் வாழ்விப்போ (2)

கோர்ட்டுக் கச்சேரி வக்கீலுக்குக் கூலிக்
கொக்காணி வாழ்வப்போ
கூட்டுறவாகத் தொழில் செய்து செல்வம்
கொழித்திடும் வாழ்விப்போ (3)

ஊர்க்கிணத்தடிப் பெண்டுகள் பேசிடும்
ஊர் வம்பு தானப்போ
ஊர்வளம் பெற மாதர்கள் கூடியே
ஒன்றுபட லிப்போ (4)

மாரி மழையின்றிப் பாரில் விளைவில்லா
மக்கள் துயரப்போ
ஏரிகுளம் வய லெங்கணும் தண்ணீராய்
ஏற்றம் பெறலிப்போ (5)

முன்செய்த தீவினை மூண்டதென்றே சும்மா
முடங்குத லப்போ

தன்கையே தனக்குதவி யாமென்னும்
தத்துவமிப்போ (6)

ஒத்துமையின்றி உழைப்பின்றிச் சோம்பலில்
உறங்குத லப்போ

ஒத்துமையாக வுழைத்தால் நம் சர்க்கார்
உதவுத லிப்போ (7)

அரசாங்கத் ததிகாரியைக் கண்டதும்
அஞ்சிடுவதப்போ

அரசாங்கத் ததிகாரியும் மக்களும்
அன்புசெய லிப்போ (8)

ஆயிரத்தித் தொள் ளாயிரத் தைம்பதில்
ஆன துயர் போச்சு

ஆயிரத் தொள்ளாயிரத் தைம்பத் தஞ்சிலே
ஆனந்த முண்டாச்சு.



# குடியாட்சி

ராகம்—ஆரபி. தாளம்—ஆதி.

பல்லவி

ஒருக்கா லஞ்சாண்டுத் திட்டப்படிக்கே
[யுழைத்தாற் பின்னர்
இருக்காது துன்பங்களே

அநுபல்லவி

தருக்கால் கடமை யென்னும் திருக்கா
[லொற்றுமையான
செருக்கால் சர்க்காருதவிப் பெருக்கால்
[எல்லோரும் கூடி


சரணம்

எதற்கெடுத்தாலும் பிறர் தயவை நாடாதே
எல்லாம் தலைவிதி யென்றெண்ணி வாடாதே
எனக்குனக் கென்று சும்மாச் சண்டை
[போடாதே
எவரைக் கண்டாலுமஞ்சிப் பயந்தே ஓடாதே
—(ஒ)

நம்மை யாளுவது நம்மவர் ஆட்சி
நமக்காகப் பலதிட்டம் போடுதல் சாட்சி

செம்மையான பலவூர்களைத் தாட்சி
திடம் கொண்டுழைத்துப் பெறுவோம்
[பலமாட்சி
—(ஓ)

கல்முளைத்த பூமியெல்லாம் நெல் விளைய
[லாச்சே
புல்முளைத்த பூமியெல்லாம் பொன் விளைய
[லாச்சே
தில்லுமுல்லும் போச்சே தெய்வ நலம்
[மாச்சே
கல்வியுஞ் செல்வமும் கூடக் கவலைகள்
[போச்சுதே
(ஓ)





# ஒளியேற்று

ராகம்—உசேனி தாளம்—ஆதி

பல்லவி

அஞ்ச வேண்டாம்—நெஞ்சமே நீ—கொஞ்ச
மேனும்

அனுபல்லவி.

அஞ்ச லஞ்சே லென் றழைக்குதே—அஞ்
சாண்டுத் திட்டம்
ஆதரவாய் நமை யணைக்குதே—இனி

சரணம்

உன்னையும் உன் ஊரையும் நோக்கு—வீண்
ஓட்டை ஓடசலூத்தையை நீக்கு—சுக
மின்னல் ஜோதித் தீபத்தை ஏற்று—ஏற்றி
விண்ணவர் வாழ்வை மண்ணிடைப் போற்று
உதவி தருது சர்க்கார் [என
உறுதி தருது சர்க்கார்
உயர்வு பெறவே யெண்ணி
அயர்விலாம லுழைப்பாய்






# வெற்றிப் பாதையிலே......

தலை நிமிர்ந்து நில்லடா—சஞ்சலத்தை
வெல்லடா (1)
நலம் மிகுந்த தஞ்சாண்டுத் திட்டமென்று
சொல்லடா

அலையலைந்து குலைகுலைந்து அவலமான நிலை
ஒழிந்து
விலையிலாத கல்வி செல்வக் கலையெல்லாம்
நிறைந்ததென்று (2)

ஆத்து வெள்ளம் அணெக்கட்டுலெ கடலெப்
போலத் தோவுது
ஏத்தம் இறைக்காது தண்ணிபாத்தி எங்கும்
பாயுது
சோத்துக் கவலெயெல்லாம் தீருது—நல்ல
சொகமான வாழ்க்கெ வந்து சேருது—நம்ம
தோல்வி தொல்லெ இகழ்ச்சி யாவும்
தொலைக்கும் திட்டம் வந்ததென்று (தலை)(3)

கண்ணருவி ரோட்டை யெல்லாம் கண்ணுடி
போல் மாத்துது
எண்ணெயின்றித் திரியுமின்றி மின்னல்
விளக்கெ ஏத்துது






எண்ணங்கள் உயரக் கல்வி
கொடுக்குது—மக்கள்
இழிவழியத் தொழில் பலவும்
தொடுக்குது இந்த
மண்ணுலகிலே வானுலகத்தெ
வகுக்கும் திட்டம் வந்ததென்று (தலை)
(4)

ஆணுக்குப் பெண் அடிமை என்னும்
ஆணவங்கள் சாயுது
அதனோடே ஜாதி சமயப் பேதமெல்
லாம் மாயுது
அரிஜனங்களை ஆதரித்துக் காக்குது—
மக்கள்
யாவரும் ஒன்றாக நிற்கப் பாக்குது—
இன்னும்
ஆடும்மாடும் வாழவழி
நாடும் திட்டம் வந்ததென்று(தலை) (5)

குன்னிக் கொமஞ்ச தோளும் கோபுரம்
போல் ஓங்குது
குள்ள நெஞ்சக் கள்ள வஞ்சக் கொள்
கை எல்லாம் நீங்குது
உண்ணும் தொழில்கள் செல்வமெல்
லாம் வாங்குது—சர்க்கார்
உதவிமக்கள் வாழ்க்கை நலனைத்
தாங்குது—இந்த





## ஆனந்தக்கும்மி

பாட்டு :

செந்தமிழ் நாடு செழித்திடவே
சேர்ந்து எல்லோரும் பணி செய்வோம்—நம்
சந்ததி யாவும் சுகமுறவே . . .
சலியா துழைத்தால் ஜெயம் பெறுவோம்.

பாட்டு :


சுதந்திர நாட்டின் ஜெயக்கொடியை
சொந்தமுடன் நாம் காத்திடுவோம்
அறுபது மாதத்தின் அதிசயங்கள்—நம்
அரசியல் செய்த அரும் பணிகள்—அதை
ஆர்வத்துடனே நாம் உணர்ந்தால்—நம்
அருமைப் பெருமைத் தெரியுமையா.





கஜல் :

ஒரு மனிதன் பெட்டியிலே
ஒளிந்திருக்கும் செல்வமதை
ஊர்க்கெல்லாம் உதவிடவே
உயர்ந்தோர்கள் செய்வது போல்
பெரு நதியின் வெள்ளமதை
பல வாய்க்காலாய்ச் செய்தே—
உலகெல்லாம் வளமுறவே
உயர் அணைகள் பல செய்தோம்.



பாட்டு :

உப்பு நீர் கடல் நடுங்கிடவே—பல
அமுத நீர் கடல் தேக்கிவிட்டோம்-அங்கு



தத்தியே பாயும் அலைகளிலே—நம்
தேசத்தின் கீதம் கேட்குதய்யா.

கஜல் :

பூமிக்குள்ளே பல புதையலிருந்து
பஞ்சலோக சத்து பலவும் பெருகுது—அதை
பைந்தமிழ் மக்கள் பார்க்க கூடாதென்று
பகைவன் வெள்ளையன் பதுக்கிவைத்தான்.

(திஸ்ரம்) :

பாட்டு :

நம்ம புதயலை நாம் எடுக்க—பல
நல்ல பெரும் திட்டம் செய்துவிட்டோம்
நம்ம சுதந்திர சர்க்காரின் சாதனை
நம் பெரும் சாதனை நாமறிவோம்

சதுஸ்ரம் :

பானை சோற்றுக் கொரு பருக்கையைப் போல்
பாரத செயல்களில் ஒன்று சொன்னோம்—நம்
பாட்டின் பதப் பொருள் பண்ணிசைபோல்
—நம்
நாட்டின் தொழிலியல் வாழியவே
நாட்டின் தொழில்கள் வாழியவே.

# திரு. என். எஸ். சிதம்பரம்
# பாடல்கள்

## சுதந்திர சக்தி

சுதந்திர வீணையிலே—நாட்டின்
ஜீவனை எழுப்பிடுவோம்!
இதந்தரும் திட்டத்தால்—நாளும்
ஈடறத் திகழ்ந்திடுவோம்!

பஞ்சமும் போக்கிடுவோம்!—கொடிய
பாழ்பசி நீக்கிடுவோம்!
நெஞ்சமும் மகிழ்ந்திடுவோம்!—திட்டம்
நிலைத்திடச் செய்திடுவோம்!

பூமணம் பொழிந்திடவே—எங்கும்
புதுவளம் தழைந்திடவே
பாமணம் கமழ்ந்திடவே—நாட்டில்
பல்வகைப் பணி செய்வோம்!



கலைகளும் வளர்த்திடுவோம்!—இன்பக்
கல்வியும் நிறைத்திடுவோம்!
நிலைகளும் உயர்த்திடுவோம்!—ஞான
நினைவுகள் கொண்டிடுவோம்!

யாவரும் ஓரினமே!—மக்கள்
யாவரும் ஓர் குலமே!
தேவியைப் போற்றிடுவோம்!—பாரத
தேசமும் ஓங்கிடவே!

காந்தியின் பாதையிலே—என்றும்
கடமையும் ஆற்றிடுவோம்!
சாந்தியும் கண்டிடுவோம்!—சுதந்திர
சக்தியும் நிறைந்திடுவோம்!

— —

# நாமிருக்கும் நாடு

**பல்லவி**

புண்ணிய சுதந்திர பூமி !—நல்ல
பொன்வளம் கொழிக்கும் புனித பூமி ! (பு)

**அநுபல்லவி**

எண்ணிய நலன்கள் ஈந்திடும் பூமி !
எல்லார் மனத்திலும் இனித்திடும் பூமி ! (பு)


**சரணங்கள்**

அருமையாய்க் குணங்கள் அரும்பிடும் பூமி !
அமிழ்தத் தமிழ்மணம் கமழ்ந்திடும் பூமி !
பெருமையாய்த் திட்டங்கள் பேணிடும் பூமி !
பிழையிலாதென்றும் இழைந்திடும் பூமி ! (பு)

மக்களே ஆட்சிசெய் மாண்புறும் பூமி !
மண்வளம் நீர்வளம் வாய்ந்திடும் பூமி !
தக்கவர் வாழ்ந்திடும் தவம்நிறை பூமி !
தரணியில் இணையிலாத் தரும பூமி ! (பு)

பழம்பெரும் பூமி பாரத பூமி !
பண்புயர் பூமி பைந்தமிழ்ப் பூமி !
செழித்திடும் நதிகள் தவழ்ந்திடும் பூமி !
செழுங்கலை யாவும் தழைத்திடும் பூமி ! (பு)

எழிலுறும் பூமியின் ஏற்றம் கண்டே
எல்லா நாடும் ஏத்திடச் செய்ய
அழகுடன் நம்முடை ஆட்சியும் தந்த
ஐந்தாண்டுத் திட்டம் அதனை உணர்வோம் !
(பு)






# நிறை வாழ்வு

### பல்லவி

திட்டங்கள் கண்டோம்! சட்டங்கள் கண்டோம்!
திருநிறை நம்நாடு பெருவளம் மிகுந்திலங்கத் (தி)

### அநுபல்லவி

வட்டமிட்டுப் பறக்கும் வான்பறவை போலே
வாட்டமில்லாச் சுதந்திர வாழ்வடைந்த நாம் பல (தி)

### சரணங்கள்

உழவினை விரிவாக்கி உணவுப்பொருள் விளைக்க
உலகினில் நம்தேசம் திலகமென நிலைக்க
எழிலுடன் கிராமங்கள் இன்னொளியால் சூழ
ஏற்றத் தாழ்வின்றி எல்லோரும் வாழ (தி)

காடுகளும் வளர்க்கக் கால்நடையும் வளர்க்கக்
கலைச்செலவமும் நல்ல கல்வியும்மிக வளர்க்க
வீடுகளும் விளங்க வெகுதொழில்களும் ஓங்க
விரைவினில் ஏழைமையும் வீழ்ச்சியுற்று நீங்க (தி)

சாலைகள் போட்டிடவே ஆலைகள்
நாட்டிடவே
சார்ந்திடும் பற்பலதொழிற் சாலைகள்
கூட்டிடவே
வேலையில்லாக் கொடுமையை மிகவும் களைந்
திடவே
வேதனைப்பஞ்சத்தை விரட்டி மகிழ்ந்திடவே
(தி)

மாதர்நலம் வளர மக்கள் நலம் வளர
வருத்தும் பிணியகற்றும் மருத்துவக்
கலைமிளிர
ஆதரவு பெருக ஐந்தாண்டுக் கொன்றாய்
அறிவு நலம்யாவும் அடைந்திடவே நன்றாய்
(தி)





# அழகு பொங்கும் இல்லம்

நல்ல திட்டம் வந்த தென்று சொல்லுவோம்!
நமது நாடு செழித்த தென்று வெல்லுவோம்!
வல்ல தொழில்கள் தேர்ந்து நன்மை
கூட்டுவோம்!
வறுமை பஞ்சப் பிணிகள் யாவும்
ஓட்டுவோம்!

உழவு பெருக்கி உவகை மிகுந்து பாடுவோம்!
உண்மை இன்ப வாழ்வு கண்டே ஆடுவோம்!
அழகு பொங்கும் இல்லம் அமைத்துத்
துலங்குவோம்!
அன்பும் ஓங்கி இடரும் நீங்கி இலங்குவோம்!

கடமை உணர்ந்து கருணை நிறைந்து
கூடுவோம்!
கல்விச் செல்வம் உரிமை யெல்லாம்
தேடுவோம்!
மடமை ஒழித்து மதியும் தழைத்து
மகிழுவோம்!
மறதி அச்சம் சோம்பல் இன்றித்
திகழுவோம்!

சொந்த ஆட்சி உரிமை நலனும்
அடைந்தோமே !

சோர்வே இன்றிச் சொகுசாய் நாளும்
உழைப்போமே !

சிந்தை தெளிந்த சேவை பலவும்
செய்வோமே !

தேச சுபிட்சம் கருதி நேசம் கொள்வோமே !

ஐந்துவருடத் திட்டமொன்று கண்டோமே !

அதுவே நாட்டின் ஆக்கமென்று
கொண்டோமே !

விந்தை கொள்ளும் வண்ணம் வெற்றி
கண்டோமே !

வேண நலன்கள் நிறைவாய் விளையக்
கொண்டோமே !

முதலாம் ஐந்து வருடத் திட்டம் முடிந்ததே !

முறையாய் இரண்டாம் திட்டம் தானும்
தொடர்ந்ததே !

இதமாய்த் திட்டம் மிகுந்த வெற்றி
யளிக்கவே !

இனிதாய் மக்கள் நாமும் உழைத்தே
உயர்வோமே ! (ந)



# ஒன்றுபட்டால் உண்டு வாழ்வே

### பல்லவி


*ஒன்று சேர்ந்துழைப்போம் வாரீர்!—*
*அரசாங்கம்*
*உவந்தளித்த திட்டம் உன்னத வெற்றிபெற*
*(ஒ)*

### அநுபல்லவி

*நன்றென உருவான முதல் ஐந்தாண்டுத்*
*திட்டம்*
*நல்கிய பலன்களெல்லாம் நன்மையா*
*யினவே! (ஒ)*

### சரணங்கள்

*அரிசனரும் கல்வி அறிவுக் கண் பெற்றனர்!*
*அனைவரும் சமதர்ம அன்புநலம் உற்றனர்!*
*விரைந்துவந்த பஞ்சம் வெகுவாய்*
*அகன்றதுவே!*
*விளைவுப்பொருள்களுமே மிகவாய்*
*நிறைந்தனவே!*
*(ஒ)*



கூட்டுறவு இயக்கமும் நாட்டினில்
வளர்ந்ததுவே !
கூடிப் பணிசெய்யும் கொள்கையும்
மலர்ந்ததுவே !
வாட்டிடும் பொல்லாத வறுமையும்
தளர்ந்ததுவே !
வையத்தில் நம்நாடு வளமுடன்
திகழ்ந்ததுவே !
(ஓ)

இதுநம தரசாங்கம் எனும்நல் லுணர்வுடனே
என்றும் பணிசெய்வோம் ! ஏற்றபயன்
பெறுவோம் !
இதமுடன் தொடங்கியுள்ள இரண்டாம்
திட்டத்தால்
எல்லா நலன்களும்நாம் எய்தி மகிழ்ந்திடவே
(ஓ)

திட்டமும் வகுத்தாலே தேசத்தில்
போதுமா ?
திட்டமும் நல்லபலன் தந்திட வேண்டாமா ?
திட்டமும் பயனளிக்க வேண்டில் மக்கள்நாம்
திறமுடன் ஒத்துழைக்க வேண்டும் ! ஆதலால்
(ஓ)

சென்னை சர்க்கார் அச்சுக்கூட சூப்பரின்டெண்டெண்ட்
அவர்களால் அச்சிடப்பட்டது.

மதுரை காமராசர் பல்கலைக்கழக
நூலகம்
தமிழியல் துறை

